## ஸ்ரீவசநபூஷணம்

## இரண்டாம் ப்ரகரணம்

115. ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கும் அஜ்ஞாந அஶக்திகள் அன்று, ஸ்வரூப விரோதமே ப்ரதாந ஹேது.
116. ப்ராபகாந்தரம் அஜ்ஞர்க்கு உபாயம்.
117. ஜ்ஞானிகளுக்கு அபாயம்.
118. அபாயமாய்த்தது ஸ்வரூப நாஶகம் ஆகையாலே.
119. 'நெறி காட்டி நீக்குதியோ' என்னா நின்றதிறே.
120. 'வர்த்ததே மே மஹத்பயம்' என்கையாலே பயஜநகம்'; 'மா ஶுச:' என்கையாலே ஶோக ஜநகம்.
121. இப்படி கொள்ளாத போது ஏதத் ப்ரவ்ருத்தியில் ப்ராயச்சித்த விதி கூடாது.
122. திருக்குருகைப்பிரான் பிள்ளான் பணிக்கும்படி - மதிராபிந்து மிஶ்ரமான சாதகும்பமய கும்பகத தீர்த்த ஸலிலம் போலே அஹங்கார மிஶ்ரமான உபாயாந்தரம்.
123. ரத்நத்துக்குப் பலகறை போலேயும் ராஜ்யத்துக்கு எலுமிச்சம்பழம் போலேயும் பலத்துக்கு ஸத்ருஶம் அன்று.
124. தான் தரித்ரன் ஆகையாலே தனக்குக் கொடுக்கலாவது ஒன்றில்லை.
125. அவன் தந்தத்தைக் கொடுக்கும் இடத்தில், அடைவிலே கொடுக்கில் அநுபாயமாம்; அடைவு கெடக் கொடுக்கில் களவு வெளிப்படும்.
126. பர்த்ரு போகத்தை வயிறு வளர்க்கைக்கு உறுப்பு ஆக்குமா போலே, இருவர்க்கும் அவத்யம்.
127. வேதாந்தங்கள் உபாயமாக விதிக்கிறபடி என் என்னில்;
128. ஔஷத ஸேவை பண்ணாதவர்களுக்கு அபிமத வஸ்துக்களிலே அத்தைக் கலஸி இடுவாரைப் போலே ஈஶ்வரனைக் கலந்து விதிக்கிற இத்தனை.
129. இத்தைப் ப்ரவர்த்திப்பித்தது பரஹிம்ஸையை நிவர்த்திப்பிக்கைக்காக.
130. இது தான் பூர்வ விஹித ஹிம்ஸை போலே; விதி நிஷேதங்கள் இரண்டுக்கும் குறை இல்லை.
131. அத்தை ஶாஸ்த்ர விஶ்வாஸத்துக்காக விதித்தது; இத்தை ஸ்வரூப விஶ்வாஸத்துக்காக விதித்தது.
132. அது தோல்புரையே போம்; இது மர்ம ஸ்பர்ஶி.
133. இது தான் கர்ம ஸாத்யம் ஆகையாலே துஷ்கரமுமாய் இருக்கும்.
134. ப்ரபத்தி உபாயத்துக்கு இக்குற்றங்கள் ஒன்றும் இல்லை.
135. ஆத்ம யாதாத்ம்ய ஜ்ஞாந கார்யம் ஆகையாலே, ஸ்வரூபத்துக்கு உசிதமுமாய், 'சிற்ற வேண்டா' என்கிறபடியே நிவ்ருத்தி ஸாத்யம் ஆகையாலே ஸுகரமுமாய் இருக்கும்.
136. பூர்ண விஷயம் ஆகையாலே பெருமைக்கு ஈடாகப் பச்சை இட ஒண்ணாது.
137. ஆபிமுக்ய ஸூசக மாத்ரத்திலே ஸந்தோஷம் விளையும்.
138. பூர்த்தி கைவாங்காதே மேல் விழுகைக்கு ஹேது இத்தனை.
139. 'பத்ரம் புஷ்பம்' 'அந்யத் பூர்ணாத்' 'புரிவதுவும் புகை பூவே'.
140. புல்லைக் காட்டி அழைத்துப் புல்லை இடுவாரைப் போலே பலஸாதனங்களுக்கு பேதம் இல்லை.
141. ஆகையாலே ஸுக ரூபமாய் இருக்கும்.
142. இவன் அவனைப் பெற நினைக்கும் போது இந்தப் ப்ரபத்தியும் உபாயம் அன்று.
143. அவன் இவனைப் பெற நினைக்கும் போது பாதகமும் விலக்கன்று.
144. இவை இரண்டும் ஸ்ரீபரதாழ்வான் பக்கலிலும் ஸ்ரீகுஹப்பெருமாள் பக்கலிலும் காணலாம்.
145. ஸ்ரீபரதாழ்வானுக்கு, நன்மை தானே தீமை ஆய்த்து; ஸ்ரீகுஹப்பெருமாளுக்கு தீமை தானே நன்மை ஆய்த்து.
146. ஸர்வ அபராதங்களுக்கும் ப்ராயச்சித்தமான ப்ரபத்தி தானும் அபராத கோடியிலேயாய் க்ஷாமணம் பண்ண வேண்டும்படி நில்லா நின்றதிறே.

147. நெடுநாள் அபரையாப் போந்த பார்யை லஜ்ஜா பயங்கள் இன்றிக்கே பர்த்ரு ஸகாஸத்திலே நின்று என்னை அங்கீகரிக்க வேணும் என்று அபேக்ஷிக்குமா போலே இருப்பது ஒன்றிறே இவன் பண்ணும் ப்ரபத்தி.
148. க்ருபையாலே வரும் பாரதந்த்ர்யத்திற் காட்டில் ஸ்வாதந்த்ர்யத்தாலே வரும் பாரதந்த்ர்யம் ப்ரபலம்.
149. இவ்வர்த்தத்தை வேத புருஷன் அபேக்ஷித்தான்.
150. அபேக்ஷா நிரபேக்ஷமாகத் திருவடிக்கும் ஸ்ரீகுஹப்பெருமாளுக்கும் இது உண்டாய்த்து.
151. இவன் முன்னிடும் அவர்களை அவன் முன்னிடும் என்னுமிடம் அபயப்ரதாநத்திலும் காணலாம்.
152. இருவர் முன்னிடுகிறதும் தன் தாம் குற்றங்களை சமிப்பிக்கைக்காக.
153. ஸ்வரூப ஸித்தியும் அத்தாலே.
154. ஔபாதிகமுமாய் நித்யமுமான பாரதந்த்ர்யம் இருவர்க்கும் உண்டிறே.
155. அநித்ய்மான இருவர் பாரதந்த்ர்யமும் குலைவதும் அத்தாலே.
156. ஸஸாக்ஷிகம் ஆகையாலே இப்பந்தத்தை இருவராலும் இல்லை செய்யப் போகாது.
157. 'என்னை நெகிழ்க்கிலும்' 'கோலமலர்ப் பாவைக்கு அன்பாகிய'.
158. கர்மணி வ்யுத்பத்தியில் ஸ்வரூப குணங்களால் வருகிற கர்த்ரு ஸங்கோச ராஹித்யத்தை நினைப்பது.
159. அதிகாரி த்ரயத்துக்கும் புருஷகாரம் அவர்ஜநீயம்.
160. தனக்குத் தான் தேடும் நன்மை தீமையோபாதி விலக்காய் இருக்கும்.
161. அழகுக்கு இட்ட சட்டை அணைக்கைக்கு விரோதியாமாப் போலே.
162. 'ஹாரோபி'.
163. புண்யம் போலே பாரதந்த்ர்யமும் பராநுபத்துக்கு விலக்கு.
164. குணம் போலே தோஷ நிவ்ருத்தி.
165. ஆபரணம் அநபிமதமாய் அழுக்கு அபிமதமாயிரா நின்றதிறே.
166. 'ஸ்நாநம் ரோஷ ஜநகம்' என்கிற வார்த்தையை ஸ்மரிப்பது.
167. 'வஞ்சக் கள்வன்' 'மங்கவொட்டு'.
168. வேர் சூடுமவர்கள் மண்பற்றுக் கழற்றாதாப் போலே ஜ்ஞாநியை விக்ரஹத்தோடே ஆதரிக்கும்.
169. பரமார்த்தனான இவனுடைய ஶரீர ஸ்திதிக்கு ஹேது கேவல பகவத் இச்சையிறே.
170. 'திருமாலிருஞ்சோலை மலையே' என்கிறபடியே உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை இவனுடைய ஶரீரைக தேஶத்திலே பண்ணும்.
171. அங்குத்தை வாஸனம் ஸாதநம்; இங்குத்தை வாஸம் ஸாத்யம்.
172. 'கல்லும் கனைகடலும்' என்கிறபடியே இது ஸித்தித்தால் அவற்றில் ஆதரம் மட்டமாய் இருக்கும்.
173. 'இளங்கோயில் கைவிடேல்' என்று இவன் ப்ரார்த்திக்க வேண்டும்படியாய் இருக்கும்.
174. ப்ராப்ய ப்ரீதி விஷயத்வத்தாலும் க்ருதஜ்ஞதையாலும் பின்பவை அபிமதங்களாய் இருக்கும்.
175. ஆகையாலே தோஷ நிவ்ருத்தி போலே ஆந்தர குணமும் விரோதியாய் இருக்கும்.
176. தோஶ நிவ்ருத்தி தானே தோஷமாமிறே.
177. 'தன்னால் வரும் நன்மை விலைப்பால் போலே; அவனால் வரும் நன்மை முலைப்பால் போலே' என்று பிள்ளான் வார்த்தை.
178. அவனை ஒழியத் தான் தனக்கு நன்மை தேடுகை ஆவது - ஸ்தநந்தயப் ப்ரஜையை மாதா பிதாக்கள் கையில் நின்றும் வாங்கி காதுகனான ஆட்டு வாணியன் கையிலே காட்டிக் கொடுக்குமா போலே இருப்பதொன்று.
179. தன்னைத் தானேயிறே முடிப்பான்.
180. தன்னைத் தானே முடிக்கையாவது - அஹங்காரத்தையும் விஷயங்களையும் விரும்புகை.
181. அஹங்காரம் அக்நி ஸ்பர்ஶம் போலே.
182. 'ந காமகலுஷம் சித்தம்' 'நஹிமே ஜீவிதேநார்த்த:' 'ந தேஹம்' 'எம்மா வீட்டுத் திறமும்'.

183. ப்ரதிகூல விஷய ஸ்பர்ஶம் விஷ ஸ்பர்ஶம் போலே, அநுகூல விஷய ஸ்பர்ஶம் விஷமிஶ்ர போஜனம் போலே.
184. அக்நி ஜ்வாலையை விழுங்கி விடாய் கெட நினைக்குமா போலேயும், ஆடுகிற பாம்பின் நிழலிலே ஒதுங்க நினைக்குமா போலேயும், விஷய ப்ரவணனாய் ஸுகிக்க நினைக்கை.
185. அசுணமா முடியுமா போலே பகவத் அநுபவைக பரனாய் ம்ருது ப்ரக்ருதியாய் இருக்குமவன் விஷய தர்ஶநத்தாலே முடியும்படி.
186. 'காட்டிப் படுப்பாயோ' என்னக் கடவதிறே.
187. அஜ்ஞானான விஷய ப்ரவணன் கேவல நாஸ்திகனைப் போலே; ஜ்ஞானவானான விஷய ப்ரவணன் ஆஸ்திக நாஸ்திகனைப் போலே.
188. கேவல நாஸ்திகனைத் திருத்தலாம்; ஆஸ்திக நாஸ்திகனை ஒருநாளும் திருத்த ஒண்ணாது.
189. இவை இரண்டும் ஸ்வரூபேண முடிக்கும் அளவன்றிக்கே பாகவத விரோதத்தையும் விளைத்து முடிக்கும்.
190. நாம ரூபங்களை உடையராய் பாகவத விரோதம் பண்ணிப் போருமவர்கள் தக்தபடம் போலே.
191. மடி புடவை வெந்தால் உண்டையும் பாவும் ஒத்துக் கிடக்கும்; காற்றடித்தவாறே பறந்து போம்.
192. "ஈஶ்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத் தொழில்கள் எல்லாம் பாகவத அபசாரம் பொறாமை" என்று ஜீயர் அருளிச் செய்வர்.
193. "அவமாநக்ரியா".
194. பாகவத அபசாரம் தான் அநேக விதம்.
195. அதிலே ஒன்று அவர்கள் பக்கல் ஜந்ம நிரூபணம்.
196. இது தான் அர்ச்சா அவதாரத்தில் உபாதாந ஸ்ம்ருதியிலும் காட்டில் க்ரூரம்.
197. அத்தை மாத்ரு யோநி பரீக்ஷையோடு ஒக்கும் என்று ஶாஸ்த்ரம் சொல்லும்.
198. த்ரிஸங்குவைப் போலே கர்ம சண்டாளனாய் மார்வில் இட்ட யஜ்ஞோபவீதம் தானே வாராய் விடும்.
199. ஜாதி சண்டாளனுக்கு காலாந்தரத்திலே பாகவதன் ஆகைக்கு யோக்யதை உண்டு; அதுவும் இல்லை இவனுக்கு.
200. ஆரூட பதிதன் ஆகையாலே.
201. இது தனக்கு அதிகாரி நியமம் இல்லை.
202. 'தமர்களில் தலைவராய சாதி அண்தணர்களேலும்' என்கையாலே.
203. இவ்விடத்திலே வைநதேய வ்ருத்தாந்தத்தையும் பிள்ளைப் பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வான் பணித்த வார்த்தையையும் ஸ்மரிப்பது.
204. ஜ்ஞாந அநுஷ்டானங்களை ஒழிந்தாலும் பேற்றுக்கு அவர்கள் பக்கல் ஸம்பந்தமே அமைகிறாப் போலே அவை உண்டானாலும் இழவுக்கு அவர்கள் பக்கல் அபசாரமே போரும்.
205. இதில் ஜந்ம வ்ருத்தாதி நியமம் இல்லை.
206. இவ்வர்த்தம் கைஸிக வ்ருத்தாந்தத்திலும், உபரிசரவஸு வ்ருத்தாந்தத்திலும் காணலாம்.
207. ப்ராஹ்மண்யம் விலைச் செல்லுகிறது. வேத அத்யயநாதி முகத்தாலே பகவல்லாப ஹேது என்று; அது தானே இழவுக்கு உறுப்பாகில் த்யாஜ்யமாமிறே.
208. ஜந்ம வ்ருத்தங்களினுடைய உத்கர்ஷமும் அபகர்ஷமும் பேற்றுக்கும் இழவுக்கும் அப்ரயோஜகம்.
209. ப்ரயோஜகம் பகவத் ஸம்பந்தமும் ததஸம்பந்தமும்.
210. பகவத் ஸம்பந்தம் உண்டானால் இரண்டும் ஒக்குமோ என்னில்.
211. ஒவ்வாது.
212. உத்க்ருஷ்டமாகப் ப்ரமித்த ஜந்மம் ப்ரம்சஸம்பாவனையாலே 'ஶரீரேஶ' என்கிறபடியே பய ஜநகம்.
213. அதுக்கு ஸ்வரூப ப்ராப்தமான நைச்யம் பாவிக்க வேணும்.
214. அபக்ருஷ்டமாகப் ப்ரமித்த உத்க்ருஷ்ட ஜந்மத்துக்கு இரண்டு தோஷமும் இல்லை.

215. நைச்யம் ஜந்ம ஸித்தம்.
216. ஆகையாலே உத்க்ருஷ்ட ஜந்மமே ஶ்ரேஷ்டம்.
217. 'ஸ்வபசோபி மஹீபால'.
218. நிக்ருஷ்ட ஜந்மத்தால் வந்த தோஷம் ஶமிப்பது விலக்ஷண ஸம்பந்தத்தாலே.
219. ஸம்பந்தத்துக்கு யோக்யதை உண்டாம் போது ஜன்மக் கொத்தை போக வேணும்.
220. ஜன்மத்துக்கு கொத்தையும் அதுக்குப் பரிஹாரமும் 'பழுதிலா ஒழுகல்' என்கிற பாட்டிலே அருளிச் செய்தார்.
221. வேதகப் பொன் போலே இவர்களோட்டை ஸம்பந்தம்.
222. இவர்கள் பக்கல் ஸாம்ய புத்தியும் ஆதிக்ய புத்தியும் நடக்க வேணும்.
223. அதாவது - ஆசார்ய துல்யர் என்றும் ஸம்ஸாரிகளிலும் தன்னிலும் ஈஶ்வரனிலும் அதிகர் என்றும் நினைக்கை.
224. ஆசார்ய ஸம்பந்தத்துக்கு அடி ஆசார்ய வசநம்.
225. இப்படி நினையாது ஒழிகையும் அபசாரம்.
226. இவ்வர்த்தம் இதிஹாஸ புராணங்களிலும் 'பயிலும் சுடரொளி' 'நெடுமாற்கடிமையிலும்' 'கண்சோர வெங்குருதியிலும்' 'நண்ணாத வாளவுணரிலும்' 'தேட்டருந்திறல் தேனிலும்' 'மேம்பொருளுக்கு' மேலில் பாட்டுக்களிலும் விஶதமாகக் காணலாம்.
227. க்ஷத்ரியனான விஶ்வாமித்ரன் ப்ரஹ்மரிஷி ஆனான்.
228. விபீஷணனை ராவணன் குலபாம்ஸநன் என்றான்; பெருமாள் இக்ஷ்வாகு வம்ஶ்யனாக நினைத்து வார்த்தை அருளிச் செய்தார்.
229. பெரிய உடையார்க்குப் பெருமாள் ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம் பண்ணி அருளினார்.
230. தர்மபுத்ரர் அஶரீரி வாக்யத்தையும் ஜ்ஞாநாதிக்யத்தையும் கொண்டு ஸ்ரீவிதுரரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்தார்.
231. ரிஷிகள் தர்மவ்யாதன் வாசலிலே துவண்டு தர்ம ஸந்தேஹங்களை சமிப்பித்துக் கொண்டார்கள்.
232. க்ருஷ்ணன் பீஷ்ம த்ரோணாதிகள் க்ருஹங்களை விட்டு ஸ்ரீவிதுரர் திருமாளிகையிலே அமுது செய்தான்.
233. பெருமாள் ஸ்ரீஶபரி கையாலே அமுது செய்தருளினார்.
234. மாறனேரி நம்பி விஷயமாகப் பெரிய நம்பி உடையவர்க்கு அருளிச் செய்த வார்த்தையை ஸ்மரிப்பது.
235. 'ப்ராதுர்ப்பாவை:' இத்யாதி.
236. பாகவதன் அன்றிக்கே வேதார்த்த ஜ்ஞாநாதிகளை உடையவன் குங்குமம் சுமந்த கழுதையோபாதி என்று சொல்லா நின்றதிறே.
237. ராஜாவான ஸ்ரீகுலசேகரப் பெருமாள் திர்யக் ஸ்தாவர ஜந்மங்களை ஆசைப்பட்டார்.
238. ப்ராஹ்மணோத்தமரான பெரியாழ்வாரும் திருமகளாரும் கோப ஜந்மத்தை ஆஸ்தாநம் பண்ணினார்கள்.
239. கந்தல் கழிந்தால் ஸர்வர்க்கும் நாரீணாமுத்தமையுடைய அவஸ்தை வரக்கடவதாய் இருக்கும்.
240. ஆறு ப்ரகாரத்தாலே பரிசுத்த ஆத்ம ஸ்வரூபத்துக்கு தத் ஸாம்யம் உண்டாய் இருக்கும்.
241. த்ருஷ்டத்தில் உத்கர்ஷம் அஹங்காரத்தாலே; அத்ருஷ்டத்தில் உத்கர்ஷம் அஹங்கார ராஹித்யத்தாலே.
242. ப்ரஹ்மாவாய் இழந்து போதல் இடைச்சியாய்ப் பெற்று விடுதல் செய்யம்படியாய் இருக்கும்.

243. இப்படி ஸர்வ ப்ரகாரத்தாலும் நாச ஹேதுவான அஹங்காரத்துக்கும் அதினுடைய கார்யமான விஷய ப்ராவண்யத்துக்கும் விளைநிலம் தான் ஆகையாலே தன்னைக் கண்டால் ஶத்ருவைக் கண்டாப் போலேயும்; அவற்றுக்கு வர்த்தகரான ஸம்ஸாரிகளைக் கண்டால் ஸர்ப்பத்தைக் கண்டாப் போலேயும்; அவற்றுக்கு நிவர்த்தகராண ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால் பந்துக்களைக் கண்டாப் போலேயும்; ஈஶ்வரனைக் கண்டால் பிதாவைக் கண்டாப் போலேயும்; ஆசார்யனைக் கண்டால் பசியன் சோற்றைக் கண்டாப் போலேயும்; ஶிஷ்யனைக் கண்டால் அபிமத விஷயத்தைக் கண்டாப் போலேயும் நினைத்து, அஹங்கார அர்த்த காமங்கள் மூன்றும் அநுகூலர் பக்கல் அநாதரத்தையும் ப்ரதிகூலர் பக்கல் ப்ராவண்யத்தையும் உபேக்ஷிக்குமவர்கள் பக்கல் அபேக்ஷையையும் பிறப்பிக்கும் என்று அஞ்சி, ஆத்ம குணங்கள் நம்மாலும் பிறராலும் பிறப்பித்துக் கொள்ள ஒண்ணாது, ஸதாசார்ய ப்ரஸாதம் அடியாக வருகிற பகவத் ப்ரஸாதத்தாலே பிறக்கும் அத்தனை என்று துணிந்து தேஹ யாத்ரையில் உபேக்ஷையும் ஆத்ம யாத்ரையில் அபேக்ஷையும் ப்ராக்ருத வஸ்துக்களில் போக்யதா புத்தி நிவ்ருத்தியும் தேஹ தாரணம் பரமாத்ம ஸமாராதந ஸமாப்தி ப்ரஸாத ப்ரதிபத்தி என்கிற புத்தி விஶேஷமும், தனக்கொரு க்லேஶம் உண்டானால் கர்ம பலம் என்றாதல் க்ருபா பலம் என்றாதல் பிறக்கும் ப்ரீதியும் ஸ்வாநுஷ்டானத்தில் ஸாதநத்வ புத்தி நிவ்ருத்தியும்; விலக்ஷணருடைய ஜ்ஞாநாநுஷ்டானங்களில் வாஞ்சையும் உகந்தருளின நிலங்களில் ஆதராதிஶயமும், மங்களாஶாஸநமும், இதர விஷயங்களில் அருசியும், ஆர்த்தியும், அநுவர்த்தந நியதியும், ஆஹார நியதியும், அநுகூல ஸஹவாஸமும், ப்ரதிகூல ஸஹவாஸ நிவ்ருத்தியும், ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக் கொண்டு போரக் கடவன்.

**இரண்டாம் ப்ரகரணம் ஸம்பூர்ணம்**

---